**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.54** **நாள்: 03.04.2026**

**சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கிடையே ஐபிஎல் கிரிக்கெட் போட்டி நடைபெறுவதை முன்னிட்டு, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, இம்மைதானத்தின் பகுதிகளில் "என் வாக்கு, என் உரிமை நாம் அனைவரும் வாக்களிப்போம், தேர்தல் நாள் : ஏப்ரல் 23" என்ற வாசகங்களுடன் கூடிய விளம்பரப் பலகை அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர்கள் வாக்களிப்பதை உறுதி செய்திடும் வகையில், பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் வாயிலாக அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேப்பாக்கம் மைதானத்தில் இன்று (03.04.2026) சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் பஞ்சாப் கிங்ஸ் அணிகளுக்கிடையே ஐபிஎல் கிரிக்கெட் போட்டி நடைபெறுகிறது. இப்போட்டியினை சென்னை மாவட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள இளம் வாக்காளர்கள், முதல் முறை வாக்களிக்க உள்ள வாக்காளர்கள் உள்ளிட்ட பல்வேறு நிலையில் உள்ள பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் காண வருவதை, முன்னிட்டு, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக, இம்மைதானத்தின் பகுதிகளில் "என் வாக்கு, என் உரிமை நாம் அனைவரும் வாக்களிப்போம், தேர்தல் நாள் : ஏப்ரல் 23" என்ற வாசகங்களுடன் கூடிய விளம்பரப் பலகை அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், கிரிக்கெட் மைதானத்தின் உள்ளே அமைக்கப்பட்டுள்ள மின்னணு திரையில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**